# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு

அலகு 3:

## இக்காலத் திறனாய்வு வரலாறு, மூலபாடத் திறனாய்வு, உரைமரபுத் திறனாய்வு, கல்வியாளர் திறனாய்வு

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை
14.09.2020

# இக்காலத் திறனாய்வு

1. ஐரோப்பியர் ஆட்சியினால் ஏற்பட்ட அரசியல், பொருளியல் மாற்றங்கள்.
2. தொழிற்சாலைகளின் தோற்றம்
3. தொடர்புக் கருவிகளின் வருகை
4. எல்லாரும் கல்விகற்றுக்கொள்ளல், ஆங்கிலக் கல்வி முறை
5. தமிழ்ச்சமூகத்தின் கட்டுமானத்தை அசைத்தன.
6. மதகுருமார்களின் தியாகம் செறிந்த வாழ்க்கை நெறி
7. தேசியம் என்ற முதலாளித்துவக் கோட்பாட்டின் வீச்சு
8. சமூகத்தின் சாரமாக விளங்கும் இலக்கியத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டன.

# இக்காலத் திறனாய்வு

## தமிழரின் இரண்டாவது மறுமலர்ச்சி இயக்கத் தோற்றம்

1. அச்சகத் தொழில் வளர்ச்சி
2. பழம்பெரும் தமிழ் நூல்களின் அச்சேற்றம்
3. ஆங்கிலக்கல்வி
4. மதகுருமார்களின் இலக்கிய இலக்கண ஆய்வுகள்

மறுமலர்ச்சி இயக்கங்களின் அடிப்படைக் கோட்பாடாக அமையும் தன் மேம்பாட்டுக் கொள்கை காரணமாக தமிழர்தம் பெருமையை ஆங்கிலத்திலும் தமிழிலும் பலர் எழுதத் தொடங்கினர்.

# இக்காலத் திறனாய்வு

திறனாய்விற்கு அடிப்படைத் தேவையான,

1. இலக்கிய வரலாற்று நூல்கள்,
2. பழம்பெரும் நூல்களின் காலத்தைக் கணிக்கும் நூல்கள் வரத்தொடங்கின.
3. ஆங்கில இலக்கியத்தில் பெருகிக்கிடந்த திறனாய்வு நூல்களும் அறிமுகமாயின.

தமிழில் இலக்கியத் திறனாய்வு தோன்றி வளர்வதற்கான சூழல் இவ்வாறு அமைந்தது.

# இக்காலத் திறனாய்வு

## புத்திலக்கியத்தின் வருகை,

மேலை இலக்கிய வகைமைகளான சிறுகதை, புதுக்கவிதை, புதினம் ஆகியன தமிழுக்கு வந்தன, தமிழில் தோன்றின.

அவற்றைப் பரப்பவும், நிலைநாட்டவும் நிறைய உரையாடவேண்டிய சூழல் ஏற்பட்டது.

ஒருபுறம் தன்மேட்பாட்டுக் கொள்கையின் வேகமான வீச்சில் தன்னை இழந்த இலக்கியப் புலவர்கள் பலரின் மேலாண்மை நிலவிய சூழலை எதிர்த்துப் புத்திலக்கியங்களை நிலைநாட்ட வேண்டிய நெருக்கடிதான் இக்காலத் திறனாய்வு வளர்வதற்கு உரமாக அமைந்தது.

புத்திலக்கியங்கள் பத்திரிகைகளோடு நெருங்கிய தொடர்புடையவை. ஆகையால் படைப்பாளர்களும் உயர்வடைந்தனர். திறனாய்வும் வளர்ந்தது.

# இக்காலத் திறனாய்வு

பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் தமிழ் இலக்கியங்கள் இடம்பெற்றதும் திறனாய்வு வளர வாய்ப்பானது. இவ்வாறு வளர்ந்த இக்காலத் திறனாய்வை,

1. மூலபாடத் திறனாய்வு
2. உரைமரபுத் திறனாய்வு
3. கல்வியாளர் திறனாய்வு
4. அழகியல்வாதத் திறனாய்வு
5. சமூக இயல் திறனாய்வு
6. ஒப்பிலக்கியம்
7. பல்கலைக்கழக ஆராய்ச்சிகள்
8. பின்-நவீனத்துவத் திறனாய்வு
9. பெண்ணியத் திறனாய்வு
10. தலித்தியத் திறனாய்வு என விரிவாக இந்நூல் ஆராய்கிறது.

# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு

அலகு 3:

## மூலபாடத் திறனாய்வு

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

21.09.2020

# மூலபாடத் திறனாய்வு

மறுமலர்ச்சி இயக்கத்தின் முதல் பணியாக, அழியும்நிலையில் இருந்த இலக்கியங்களை அச்சேற்றிப் புத்தகமாகப் பதிப்பிக்கும் பணி ஓர் இயக்கமாக நடைபெற்றது.

இடைக்காலத்திலேயே உரையாசிரியர்கள் நடுவே மூலபாடம் பற்றிய கருத்து வேறுபாடுகள் நிலவி வந்துள்ளன. இவற்றை அவர்கள் பாடபேதம் என்று கூறி, மிக எளிய வழியில் தீர்வு கண்டு வந்தனர்.

தங்கள் கருத்தியலுக்கும், காலத்துக்கும் பொருத்தமான பாடங்களைக் கொள்வதற்கு இந்தப் பாடபேதம் ஓர் உத்தியாகப் பயன்படுத்தப்பட்டது.

அச்சு ஊடக காலத்தில் எழுதிய பாரதியின் படைப்புகளில் மூலம் பற்றிய சிக்கல்களை கைலாசபதி எடுத்துக்காட்டுடன் விளக்கினார்.

# மூலபாடத் திறனாய்வு

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய இலக்கியங்களைக் கொண்டது தமிழ் மொழி.

பல மதம் சார்ந்த, பழமையான, பல மொழி ஆதிக்கத்திற்குள்ளான வரலாற்றை உடைய மொழி, இலக்கியத்தில் மூலபாடம் பற்றிய ஆய்வில் அறிவியல் மனப்பான்மையுடன் செயல்பட்டாலும் அசலான மூலபாடத்தைப் பெற்றுவிட முடியுமா என்பது ஐயமே.

தமிழ் மூலபாடத் திறனாய்வில் ஈடுபட்ட மூத்த அறிஞர்கள், 1. உ.வே. சாமிநாத ஐயர், 2. சி.வை. தாமோதரம் பிள்ளை, 3. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

# மூலபாடத் திறனாய்வு

## சி.வை. தாமோதரம்பிள்ளை

மூலபாடத் திறனாய்வின் முன்னோடி சி.வை. தாமோதரம்பிள்ளை – க. கைலாசபதி.

சி.வை.தா.வுக்கு மூலபாடத் திறனாய்வில் இருந்த ஆர்வத்தை அவரது கலித்தொகைப் பதிப்பின் முன்னுரை வெளிப்படுத்துகிறது.

## உ.வே.சாமிநாத ஐயர்

மூலபாடத் திறனாய்வில் தீவிரமாக ஈடுபட்டவர்.

தமிழ் மூலபாடத் திறனாய்வு இவரால் செழுமையுற்றது.

தமக்குக் கிடைத்த பல்வேறு மூலச்சுவடிகளை ஆராய்ந்து பாட வேறுபாடுகளை ஒப்பிட்டு நோக்கி முடிவெடுத்தார்.

# மூலபாடத் திறனாய்வு

## சிலப்பதிகாரப் பதிப்பு

23 மூலச் சுவடிகளை ஆராய்ந்து 1882இல் சிலப்பதிகாரத்தைப் பதிப்பித்தார்

இரண்டாம் பதிப்பு: 28 ஆண்டுகளுக்குப் பிறகு மேலும் 3 கையெழுத்துப் படிகளை ஆராய்ந்து திருத்தம் செய்தார்

மூன்றாம் பதிப்பு: 1927இல் மேலும் பல திருத்தங்களைச் செய்து வெளியிட்டார்.

ஆய்வாளருக்கு வேண்டிய தொடர்ந்து தேடும் தன்மையையும் சரியான விளக்கம் கிடைக்கும்போது பழைய கருத்தை மாற்றிக்கொள்ளக்கூடிய மனப்பக்குவத்தையும் உ.வே.சா. பெற்றிருந்தார்.

# மூலபாடத் திறனாய்வு

தொல்காப்பியம், சீவகசிந்தாமணி, பத்துப்பாட்டு, குறுந்தொகை, மணிமேகலை என பழம்பெரும் நூல்கள் பலவற்றையும் பதிப்பிதமையால் அவரால் எளிதாக மூலபாடத்தை நோக்கிச் செல்ல முடிந்தது.

உ.வே.சா.வின் மூலபாடத் திறனாய்வு முறை

1. உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்ற முறையில் மூலபாடத்தை ஆராய்ந்தார்.
2. பாட வேறுபாடுகளைப் பதிப்பித்துக் காட்டினார்
3. அடிக்குறிப்பில் சிறந்த கருத்துக்களைத் திரட்டித் தந்தார்
4. ஒவ்வொரு நூலின் பதிப்பிலும் ஆராய்ச்சி முன்னுரை எழுதினார்
5. தான் ஆராய்ந்தெடுத்த குறிப்புகளையும் வரிசைப்படுத்திப் பதிப்பித்தார்.

# மூலபாடத் திறனாய்வு

6. விளங்காத பகுதிகளை வேறு நூல் கொண்டும், பிறர் வாய்க் கேட்டும் விளக்கினார்.

7. மூலபாடத் திறனாய்வில் மற்றவர்களிடமிருந்து எவ்வாறு தான் வேறுபடுகிறார் என்பதையும் எவ்வெவ்வாறெல்லாம் ஆராய்ந்து முடிவுக்கு வந்தார் என்பதையும் விளக்குகிறார்.

> "பிரதிகளில் இல்லாதவற்றைக் கூட்டியும், உள்ளவற்றை மாற்றியும் குறைத்தும் மனம் போனவாறே இவற்றைப் பதிப்பித்திலேன். உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்னும் இரண்டையும் கருவியாகக் கொண்டு பலமுறை ஆராய்ச்சி செய்து பிரதிகளிலிருந்தவாறே பதிப்பித்தேன்." – உ.வே.சா.

# மூலபாடத் திறனாய்வு

மூலபாடத் திறனாய்வில் ஈடுபட்டு வளப்படுத்தியவர்கள்:

1. ஆறுமுகநாவலர்
2. இராகவ ஐயங்கார்
3. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்
4. சௌரிப் பெருமாள் அரங்கனார்
5. பாவானந்தம் பிள்ளை
6. ஆர். வேங்கடாசலம் பிள்ளை
7. வையாபுரிப்பிள்ளை

அச்சேறிய நூல்களின் மறுபதிப்பைத் தெளிவுபெறச் செம்மைப்படுத்தியவர்கள்:

1. ந.மு. வேங்கடசாமி நாட்டார்
2. தண்டபாணி தேசிகர்
3. மே.வீ. வேணுகோபால் பிள்ளை

முதலானவர்கள்.

# மூலபாடத் திறனாய்வு

## மேலைநாட்டில் மூலபாடத் திறனாய்வு

விவிலிய நூல் ஆராய்ச்சியை ஒட்டி மேலைநாட்டில் மூலபாடத் திறனாய்வு பெருவளர்ச்சி பெற்றது.

17ஆம் நூற்றாண்டிலேயே ழான் மாபில்லன், சாசனவியல் என்ற நூலை இயற்றினார். அதில் மூலபாடத் திறனாய்வின் சிக்கல்களையும் நுட்பங்களையும் விரிவாக ஆராய்ந்தார்.

அவரது ஆராய்ச்சியைத் தொடர்ந்து மூலபாடத்திறனாய்வு அறிவியல் கலை என்று கூறும் அளவுக்கு மேலை நாடுகளில் வளர்ந்த்து.

# மூலபாடத் திறனாய்வு

## மூலபாடத் திறனாய்வுக் கூறுகள்

1. ஏடுகளின் குடிவழியை (Genealogical Tree) ஆராய்வது

2. ஏடுகளை அறிவியல் ஆய்வு நெறிமுறைப்படி ஒப்பிடுவது

3. ஏடுகளின் முதன்மையான மூலத்தை (Archetype) உறுதிப்படுத்திப் பதிப்பது

## தமிழ் மூலபாடத் தினாய்வு – ஒரு மதிப்பீடு

தமிழ் மூலபாடத் திறனாய்வில் ஈடுபட்டோர் அனைவருக்கும் இத்தகைய பார்வை இல்லை.

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், மதுரைப் பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களின் மூலமாகப் பதிப்பிக்கப்பட்ட நூல்களில் இத்தகைய திறனாய்வு நெறிகளைப் பின்பற்றினார்களா என்பது ஆய்வுக்கு உரியது.

# மூலபாடத் திறனாய்வு

## தமிழ் மூலபாடத் தினாய்வு – ஒரு மதிப்பீடு

மூலபாடத் திறனாய்வுக் கூறுகளை ஆங்கிலம் வழி அறிய வாய்ப்பில்லாத உ.வே. சாமிநாத ஐயரின் சாதனை வியப்புக்குரியதாயினும் மூலபாடத் திறனாய்வாளர் பார்வையில் அவரின் பணியும் குறைபாடு உடையதே.

“பிரதிகளில் இருந்தவாறே பதிப்பித்தேன்” – என்று அவர் கூறியுள்ளார்.

உ.வே.சாவுக்குக் கிடைத்த பிரதிகளே மாற்றத்திற்கு உள்ளான சிதைந்த வடிவங்களில்தான் இருந்திருக்கும் என்று கருத வாய்ப்புண்டு.

## மாற்றத்திற்கும் சிதைவுக்குமான காரணங்கள்

1. 100-150 ஆண்டுகளுக்குமேல் ஓலைச்சுவடிகளைப் பாதுகாக்க முடியாதாகையால் தொடர்ந்து படியெடுக்கும்போது சிதைய வாய்ப்புண்டு.

# மூலபாடத் திறனாய்வு

## மாற்றத்திற்கும் சிதைவுக்குமான காரணங்கள்

2. தமிழ் எழுத்து வடிவமும் மாறிக்கொண்டே வருகிறது.

3. அரசியலில் தொடர்ச்சியாகப் பல மாற்றங்களும் குழப்பங்களும் நடந்துள்ளன.

4. மதப் போராட்டம் வரலாறு நெடுகிலும் தொடர்ந்து வந்துள்ளன. ஆகவே, இலக்கிய நூல்களுக்குள்ளும் இடைச்செருகல் பெருக வாய்ப்பு இருந்துவந்திருக்கிறது.

5. தமிழ்மொழி – சமஸ்கிருதமொழிப் போராட்டத்தின் விளைவுகள் புறக்கணிக்கத்தக்கவை அல்ல.

# மூலபாடத் திறனாய்வு

## ஏடுகளின் குடிவழியை ஆராய்தல்

குடிவழியை ஆராய்வதற்கு வட்டார மொழியியலின் வளர்ச்சி அடிப்படைத் தேவையாகும்.

மொழியியல் கல்வி வளர்ந்திருந்தாலும் மூலபாடத் திறனாய்வில் ஆழமாக ஈடுபடாமல் பழைய பதிப்பை அப்படியே பதிப்பிப்பது தமிழ்த் திறனாய்வு வளர்ச்சிக்கு உதவாது.

அமைப்பியல் திறனாய்வு குறித்து விரிவாகப் பேசும் தற்காலத்தில் மூலப் பிரதியை ஆழமாகக் கற்கவேண்டிய தேவை மறுபடியும் ஏற்பட்டுள்ளது.

மூலப்பிரதியை இன்றைய காலத்தேவைக்கு ஏற்ப விரிவாக்கம் செய்யவேண்டிய நெருக்கடி நிகழ்கிறது.

# மூலபாடத் திறனாய்வு

## புதிய இலக்கியங்களுக்கும் தேவை மூலபாடத் திறனாய்வு

பாரதி, பாரதிதாசன், புதுமைப்பித்தன் படைப்புகளிலும் மூலபாடத் திறனாய்வு தேவை.

மாப்பசானின் கதைகள் சில புதுமைப்பித்தன் பெயரில் தமிழில் உலவுவதை பிரெஞ்சுப் பேராசிரியர் கிருட்டிணமூர்த்தி எடுத்துக்காட்டியுள்ளார்.

பொதியவெற்பன் உள்ளிட்ட புதுமைப்பித்தன் ஆய்வாளர்கள் மாப்பசானின் கதைகளை புதுமைப்பித்தனின் கதைகளாகக் கொண்டு, புதுமைப்பித்தனின் படைப்பாற்றலைப் பலவாறு வியந்து எழுதியுள்ளனர்.

இது மூலபாடத் திறனாய்வின் இன்றியமையாமையை வலியுறுத்துகிறது.

# மூலபாடத் திறனாய்வு

மூலபாடத் திறனாய்வில் ஈடுபட்டோர் பெரும்பாலும் கல்வியாளர்களே.

இலக்கண விதிமுறைகளின் அடிப்படையில் இவர்களின் ஆய்வுகள் அமைந்துள்ளன.

சமூக வரலாற்றிற்கும் இலக்கிய மூலப் பிரதிக்கும் உள்ள உறவை முதன்மைப்படுத்தி ஆராயவில்லை.

மூலபாடத் திறனாய்வு குறித்து செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ், தென்மொழி, தமிழ்ப்பொழில் முதலிய இதழ்கள் கட்டுரைகளை வெளியிட்டுள்ளன. இம்முயற்சியை விரிவாக விளக்கி ஆராய்வதற்கு இடம் உள்ளது.

# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு

அலகு 3:

## உரைமரபுத் திறனாய்வு

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

23.09.2020

# உரைமரபுத் திறனாய்வு

மறுமலர்ச்சி இயக்கத்திற்கு பலவகையிலும் கருத்துக் கருவியாக விளங்கிய பழைய இலக்கியங்களைக் கல்விப்புலத்துக்கும் வெகுமக்களுக்கும் எடுத்துச்செல்லவேண்டி இருந்தது.

அதற்கு எளிமையான உரைகள் – உரைவிளக்கங்கள் தேவைப்பட்டன.

ஆர். கே. சண்முகங்ஞ்செட்டியாரின் கூற்று,

“சுற்றிலும் பார்த்தேன்; வறண்ட முட்செடிகள் என்று கருதியிருந்த செடிகளில், மலர்ந்த பூக்கள் நிறைந்த்திருந்தன; எங்கும் நறுமணம் வீசிற்று; இதுதான் தமிழின் மறுமலர்ச்சி; எங்கும் கமழும் தமிழ் மணம் என்று உணர்ந்தேன்”

இவ்வியக்கத்தால் தமிழ்ப் படிப்போர் தொகை பெருகியது. தமிழ் பாடப்பகுதியானது. தமிழ்க்கல்லூரிகள் தோன்றின. தமிழ் பெருமையாக உணரப்பட்டது.

# உரைமரபுத் திறனாய்வு

உரைகளின் தன்மைகள்

1. இடைக்கால உரைகள் போன்றே இலக்கணக்குறிப்பு, நயவுரை, சொல்விளக்கம் முதலியன கொண்டு விளங்குகின்றன.
2. பழம்பெரும் நூல்களின் பெருமையைப் பாராட்டுவதையே நோக்கமாகக் கொண்டமைந்தன.
3. இடைக்கால உரைகாரர்கள் சமஸ்கிருதத்தோடு ஒப்பிட்டு விளக்கினர். இவர்கள் சமஸ்கிருதத்தோடும் ஆங்கிலத்தோடும் ஒப்பிட்டு விளக்கினர்.

அழகியல் சுவை அடிப்படையில் ஆங்கில மரபிற்கு ஏற்ப விளக்கியோர் ஆர்.கே. சண்முகஞ்செட்டியார், கே. இராசகோபாலாசாரியார், டி.கே. சண்முகம்பிள்ளை ஆகியோர்.

# உரைமரபுத் திறனாய்வு

உரைகளின் தன்மைகள்

இராசகோபாலாசாரியார் : சிலப்பதிகாரம் கானல்வரிக்கு மட்டும் உரை கண்டார்.

டி.கே.சி.: கம்பராமாயணம், முத்தொள்ளாயிரத்திற்கு உரை கண்டார். (ஆங்காங்கே ஆங்கிலக் கவிஞர்கள், திறனாய்வாளர்களின் கருத்துகளையும் மேற்கோள் காட்டினார்)

4. எளிமைப்படுத்தும் முயற்சியில் பழைய உரைக்கு உரை எழுதினர். அடியார்க்கு நல்லார் உரையை தி.க. சுப்புராயச் செட்டியாரும், பரிமேலழகர் உரைக்கு கோ. வடிவேல் செட்டியாரும் உரையெழுதினர்.

5. உரையெழுதுதலில் தம் காலத்திய திறனாய்வுச் சிந்தனையையும் பயன்படுத்திக்கொண்டனர்.

(கண்ணகி, கோவலன் இருவரும் களவுக் காதலர் என்பர் சோமசுந்தரபாரதியார், தெ.பொ.மீ. முதலானோர்.)

# உரைமரபுத் திறனாய்வு

## உரைகளின் தன்மைகள்

6. தமிழ் மறுமலர்ச்சியோடு சைவ சமய மறுமலர்ச்சியும் தோன்றியது.

இடைக்கால உரைகாரர்களின் கருத்துக்களை, சைவ சமய எழுச்சிக்கு ஏற்ப மாற்றி எழுதினர். ஆறுமுகநாவலர், மறைமலையடிகள் முதலியோர் இம்மறுமலர்ச்சிக்குப் பெரிதும் காரணமாக விளங்கியோர்.

அ. கோட்டம் என்பதற்கு அருகன் கோயில் எனப் பொருள் கொள்வார் அடியார்க்கு நல்லார். ந.மு. வேங்கடசாமி நாட்டார், அக்கருத்தை மறுத்து இங்கோவடிகள் சைவசமயத்தவர் என விளக்குவார்.

ஆ. பொ.வே. சோமசுந்தரனார், இளங்கோவடிகளை வள்ளலாரின் சமரச சன்மார்க்க நெறியோடு இணைக்கிறார்.

# உரைமரபுத் திறனாய்வு

இக்கால உரைகாரர்கள் பழைய உரைமரபைப் பின்பற்றினாலும் தங்கள் கலத்தின் தேவையை நிறைவேற்றியதோடு மூல இலக்கியத்தைப் பலவிதமான திறனாய்வுப் பார்வைகளுக்கு ஆட்படுத்தி மக்கள் நடுவே பேசவைத்தல் என்ற பணியைச் செய்துள்ளனர். இதன்மூலம், தற்காலத் திறனாய்வு வரலாற்றில் குறிக்கத்தக்கவர்களாக விளங்குகின்றனர்.

## குறிப்பிடத்தக்க உரைகாரர்கள்

உ.வே.சா.: குறுந்தொகை, சிவகசிந்தாமணி

திருக்குறள்: அரசஞ்சண்முகனார், வ.உ.சி. புலவர் குழந்தை

ஔவை துரைசாமிப்பிள்ளை: புறநானூறு, பதிற்றுப்பத்து

சிலம்பு: வேங்கடசாமி நாட்டார், பெருமழைப்புலவர்

வை.மு.கோ.: கம்பராமாயணம் முழுமைக்கும்

சபாபதி முதலியார்: பெரியபுராணம்

# உரைமரபுத் திறனாய்வு

இந்த உரைமரபு,

மறைமலையடிகள், மு.வ., அ.ச. ஞானசம்பந்தன் முதலிய இக்காலக் கல்வியாளர்களிடத்திலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இதுகுறித்த சு. கலாபரமேஸவரன் கூற்று,

“நவீனத் தமிழ்த் திறனாய்வு தோன்றிய பின்பும் டி.கே.சி., வ.வே.சு. ஐயர், மறைமலையடிகள் முதலானோரின் திறனாய்வு முறையிலும் உரையாசிரியர்களின் திறனாய்வு முறைத்தடங்களைக் காணக்கூடியதாக இருக்கிறது.” என்றமைகிறது.

# கல்வியாளர் திறனாய்வு

உலக அளவில் திறனாய்வுப் புலத்தில் பெரும்பாலான கல்வியாளர்களின் அறிவுத்தளம், இரசனை ஆற்றல், நடை முதலியன கேள்விக்கு உரியதாகவும், கேலிக்கு உரியதாகவும் இன்றளவும் இருந்துவருகின்றது. இருந்தபோதிலும் கல்வியாளர்களின் பங்கைப் புறக்கணித்துவிட முடியாது.

1. ஒரு நூலைப்பற்றிய விரிவான கலந்துரையாடலுக்குக் காரணமாக இருப்பவர்கள் கல்வியாளர்களே.
2. வளரும் இளம் தலைமுறையின் மூளையாகவும் இதயமாகவும் இருக்கின்றனர்.
3. அவர்கள் ஒரு சமூகத்தின் வாயாக விளங்குகின்றனர்.

# செல்வக்கேசவராய முதலியார்

நவீனத் திறனாய்வின், கல்விநெறித் திறனாய்வாளர்களின் முன்னோடி

திருமணம் செல்வக் கேசவராய முதலியார் (1864-1921)

1. 1897லிலேயே சித்தாந்த தீபிகை இதழில் மேலைநாட்டுத் திறனாய்வு நோக்கில் கம்பன் பற்றிக் கட்டுரை எழுதினார்.
2. படைப்பைச் சுவைத்து விளக்கும் உரைகார்ர்களிடத்தில் கொண்ட ஈடுபாடு காரணமாகத் தனது பிள்ளைகள் மூவருக்கும் பரிமேலழகர், நச்சினார்க்கினியர், சேனாவரையர் எனப் பெயரிட்டார்.
3. பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியராகையால் பாடத்திட்டத்தில் இலக்கியம் இடம்பெற்றதால் தொழில் அடிப்படையிலும் திறனாய்வு முயற்சியில் ஈடுபடும் சூழல் ஏற்பட்டது.

# செல்வக்கேசவராய முதலியார்

4. முதுமொழிக்காஞ்சி, பழமொழி, அறநெறிச்சாரம், அரிச்சந்திர புராணம், குசேலோபாக்கியானம் முதலான நூல்களை ஆராய்ந்து பதிப்பித்தார்.

5. கண்ணகி வரலாறு, கலிங்கத்துப் பரணி – உரைநடையில் எழுதினார்.

6. இவரது திறனாய்வு முயற்சியில் தலைசிறந்து நிற்பவை வசனம், செய்யுள் என்ற இரண்டு கட்டுரைகளே. கம்பநாடர், திருவள்ளுவர் என்ற இரண்டு கட்டுரைகளும் அடுத்துக் குறிப்பிடத்தக்கன.

வசனம் – கட்டுரை

1. வசனம் என்ற சொல்லை ஆராய்ந்து தொடங்குகிறார்.

2. தொல்காப்பியர் காலம் தொடங்கி தன் காலத்துச் செய்திப்பத்திரிகைகளின் உரைநடைவரை வரலாற்று அடிப்படையில் விளக்கியுள்ளார்.

# செல்வக்கேசவராய முதலியார்

வசனம் – கட்டுரை

3. ஒவ்வொரு நூலையும் மதிப்பீடு செய்துள்ளார்.

4. வசனநடை என்ற உட்தலைப்பில், நடை குறித்துத் திறனாய்வாளருக்கு வேண்டிய தெளிந்த வரலாற்று உணர்வோடும், தான் எழுதும் பொருள் பற்றித் தேக்கிய அறிவுப் பெருக்கத்தோடும் மதிப்பிடக்கூடிய நெஞ்சத் துணிவோடு எழுதுகிறார். அதேநேரத்தில், ஒவ்வொரு மனிதனும் தான் வாழும் காலத்திய அறிவுநிலையோடும் சமூக நிலையோடும் பிரிக்கப்பட்டு ஓர் எல்லைக்குள் உட்படுத்தப்படுகிறார் என்ற மேலான தெளிவோடு எழுதுகிறார்.

5. தனது வசனநடை குறித்த திறனாய்வில் உள்ள மயங்கியுரைத்தல், விடுபடல், குறைத்து மதிப்பிடல் முதலியன இருக்கக்கூடும் இவை ஆராய்ச்சி சிறக்கும்போது திருத்தம் பெறும் என்று தன்னை வியவாத் திறனாய்வாளனாக வெளிப்படுகிறார்.

# செல்வக்கேசவராய முதலியார்

வசனம் – கட்டுரை

ஐரோப்பியர், உரைநடை வளர்ச்சியால் அறிவு பெற்று, நம்மைவிட நாகரிக நிலையில் முன்னேறிவிட்டனர் எனக் கருதும் திருமணத்தார், “தமிழிலும் உடைநடை வளர்ந்தால்தான் மக்களிடையே அறிவு வளர்ச்சி பரவலாகும். வேலையாட்கள், கூலியாட்கள் போன்ற ஏழைகளின் கண்கள் திறக்கப்படும்” என்று எழுதுகிறார்.

இலக்கிய மாற்றத்தைச் சமூகத் தேவையோடு இணைத்துப் பார்க்கும் இந்தத் திறனாய்வுப் பார்வையை இன்றைய கல்விநெறித் திறனாய்வாளர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

அவர் காலத்திய கல்வியாளர்கள் போன்று புத்திலக்கியத்தைப் புறக்கணிக்காமல் முதல் புதின எழுத்தாளராகக் கருதப்படும் வேதநாயகம் பிள்ளையின் உரைநடை இலக்கியத்தையும் மதிப்பிடு ஞானச் செழிப்பு அவரிடம் உண்டு.

# செல்வக்கேசவராய முதலியார்

வசனம் – கட்டுரை

ஐரோப்பியர், உரைநடை வளர்ச்சியால் அறிவு பெற்று, நம்மைவிட நாகரிக நிலையில் முன்னேறிவிட்டனர் எனக் கருதும் திருமணத்தார், “தமிழிலும் உடைநடை வளர்ந்தால்தான் மக்களிடையே அறிவு வளர்ச்சி பரவலாகும். வேலையாட்கள், கூலியாட்கள் போன்ற ஏழைகளின் கண்கள் திறக்கப்படும்” என்று எழுதுகிறார்.

இலக்கிய மாற்றத்தைச் சமூகத் தேவையோடு இணைத்துப் பார்க்கும் இந்தத் திறனாய்வுப் பார்வையை இன்றைய கல்விநெறித் திறனாய்வாளர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

அவர் காலத்திய கல்வியாளர்கள் போன்று புத்திலக்கியத்தைப் புறக்கணிக்காமல் முதல் புதின எழுத்தாளராகக் கருதப்படும் வேதநாயகம் பிள்ளையின் உரைநடை இலக்கியத்தையும் மதிப்பிட்ட ஞானச் செழிப்பு அவரிடம் உண்டு.

# செல்வக்கேசவராய முதலியார்

செய்யுள் – கட்டுரை

ஆங்கில இலக்கியத் திறனாய்வைப் பின்பற்றி ஆழமும் நுட்பும் நிறைந்த ஒரு திறனாய்வுக் கட்டுரையை எழுதியுள்ளார்.

1. சமஸ்கிருதம், ஆங்கிலம், தெலுங்கு முதலிய பிறமொழிக் கருத்துக்களோடு தமிழ்ச் சிந்தனை மரபையும் இணைத்துத் தருகிறார்.

# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு

அலகு 3:

## கல்வியாளர் திறனாய்வு -2

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

05.10.2020

# செல்வக்கேசவராய முதலியார்

செய்யுள் – கட்டுரை

ஆங்கில இலக்கியத் திறனாய்வைப் பின்பற்றி ஆழமும் நுட்பும் நிறைந்த ஒரு திறனாய்வுக் கட்டுரையை எழுதியுள்ளார்.

1. சமஸ்கிருதம், ஆங்கிலம், தெலுங்கு முதலிய பிறமொழிக் கருத்துக்களோடு தமிழ்ச் சிந்தனை மரபையும் இணைத்துத் தருகிறார்.
2. இலக்கிய அழகியலில் உள்ள அடிப்படைப் பிரச்சனை பற்றி அவர் உரக்கச் சிந்தித்துள்ளார்.

- கவித்தும் – தெய்வ அருளால் கருவிலே உருவாவது – இந்திய மரபுச் சிந்தனை. இதற்கு நேர்மாறாக “தொடர்ந்து பயிற்சி பெறுவது” கவித்துவத்தை வளப்படுத்தும் என்கிறார்.

அகத்திற்கும் புறத்திற்கும் உள்ள இடத்தைக் கண்டு தெளிந்துள்ளார்.

# செல்வக்கேசவராய முதலியார்

### 3. பாவிகப் பண்பு

பின்வந்த டி.கே.சி. போல கவிஞனின் படைப்பை தனித்தனிப் பாடல்களாகக் கண்டு சொக்கிப்போகாமல் அவரது படைப்பு முழுவதையும் உள்வாங்கி அவற்றின் சாரத்தை எடுப்பதன் மூலம் தன் வாழ்க்கையின் சாரத்தைக் கண்டெடுத்துக்கொள்வதாய் இருக்கவேண்டும். – வாழ்க்கைக்கும் இலக்கியத்துக்கும் உள்ள உறவை விளக்குகிறார்.

### 4. திறனாய்வின் மூன்று கோணங்கள்

1. படைப்பவன் பார்வையில்
2. படைப்பு என்ற அளவில் (தொழில்நுட்பப் பார்வை)
3. வாசகனின் ஏற்புநிலை என்ற அளவில் (இதில் சமூகமும் உட்படும்)

# செல்வக்கேசவராய முதலியார்

5. படைப்பைப்பற்றித் திறனாய்வாளன் எழுதும்போது

அ. அதுகுறித்த பழைய கருத்துக்களைத் தொகுத்தல்

ஆ. அதுபற்றிய தன் காலச் சிந்தனைகளைத் தொகுத்தல்

இ. மொத்தமாக வைத்துத் தானும் சிந்தித்தல்

ஈ. மூன்றையும் இணைப்பதில் கிடைப்பதைத் தெளிவாகவும் ஆற்றலுடனும் வெளியிடத் தெரியவேண்டும்.

6. கவிதை தரும் இன்பம்

செய்யுளில் இன்பத்தைத் தருவது குணமும் அலங்காரமும்.

சுவைகளுக்கு மெய்ப்பாடே அடிப்படை. ஆகவே பாவனா சக்தியால் சுவை விளைவிப்பதே கவி லக்ஷணமாகும் என்கிறார். பாவனா சக்திதான் கற்பனா சக்தி.

# செல்வக்கேசவராய முதலியார்

7. கற்பனா சக்தி

கற்பனை என்பது ஒரு பொருளில் கவியானவன் தனது சாதுரியத்தால் முன்னில்லாத சுவையைப் பிறப்பித்தல்.

8. படைப்புத் தொழிலின் படிநிலைகள்

உதிக்கின்ற சமயமறிந்து பெற்றதனால்தான் கம்பராமாயணம் அழகும் ஆயுளும் பெறுவதாயிற்று.

9. கட்டற்ற ஆனந்தப் பெருக்கின் தன் வெளிப்பாடாக இலக்கியப் படைப்பைக் காண்கிறார்.

10. ஒழுக்கநெறித் திறனாய்வாளர்

அறம் பொருள் இன்பம் வீட்டைதல் நூற்பயன் என்கிறார்.

# செல்வக்கேசவராய முதலியார்

11. படைப்பின் சமூக நிலைபேறு

பொதுஜன அங்கீகாரத்தால் காலாந்தரத்தில் கீர்த்தி பெற்ற பின்னரே உத்தம கவிகளின் செய்யுட்களைக் கல்விமான்கள் பாராயணம் செய்வர்.

ஒரு கல்வியாளராக இருந்துகொண்டு, பொதுமக்களுக்கும் இலக்கியத்தின் வாழ்விற்கும் இருக்கும் நெருங்கிய பிணைப்பை அவரது சிந்தனை ஆற்றல் கண்ட அளவிற்கு இன்றைய கல்வியாளர்களும் காணும்போதே தமிழ்த் திறனாய்வு வளரும்.

“அவர் கடைப்பிடித்த நேர்மையும் துணிவும் திட்பமும் நுட்பமும் சாதாரணமாகத் திறனாய்வுத் துறையில் காணக்கிடைக்காதவை” – சாலை இளந்திரையன்.

12. பழமொழிகளாலும் கட்டுரையைச் செழுமைப்படுத்தித் தமிழ் மரபைத் தம் எழுத்தில் இணைக்கின்றார்.

# மறைமலையடிகள்

1. தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை – 1876 – 1950)
2. கல்வியாளர் என்றாலும் இயக்கம் சார்ந்தவர்
3. பிராமணர் – பிராமணரல்லாதார்;

   சைவம் – சைவம் அல்லாதார் என்ற பார்வையை

அழுத்தமாக உடையவர். - இவரது இலக்கிய அணுகுமுறை இந்தக் கோணத்திலேயே அமைந்திருக்கிறது.

திறனாய்வுப் புலத்தை அறியக் கிடைக்கும் ஆராய்ச்சி நூல்கள்

1. முல்லைப்பாட்டு ஆராய்ச்சி உரை (1903)
2. பட்டினப்பாலை ஆராய்ச்சி உரை (1934)
3. முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர் (1936)

# மறைமலையடிகள்

முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை –ஆராய்ச்சி உரைகள்

1. நச்சினார்க்கினியர் உரை புரியவில்லையே என்ற மாணவர்களுக்காக எழுதியது. பாடப்பகுதி சார்ந்தது.
2. பழைய உரைகாரர்களின் தன்மை இயல்பாகக் காட்சியளிக்கிறது.
3. ஆங்கில மொழி நூலறிவு – வில்லியம் மிண்டோவின் திறனாய்வுக் கருத்துக்களைப் பின்பற்றித் தான் ஆய்வுரை செய்வதாக முன்னுரையில் கூறுகிறார்.

சாகுந்தல நாடக ஆராய்ச்சி

1. நூற்புலமைக்கும் நாடகம் பற்றிய நுட்பமான அறிவிற்கும் எடுத்துக்காட்டு.
2. சேக்சுபியரையும் காளிதாசரையும் ஒப்பிட்டுப் பேசிய பிராமண அறிஞரைப் பின்பற்றி காளிதாசரையும் இளங்கோவடிகளையும் விளக்க முயன்றுள்ளார்.

# மறைமலையடிகள்



தம் மேம்பாட்டுக் கொள்கை – ஆழமாகப் பதிந்திருந்தது

"அடிகளின் திறனாய்வு, பழைய உரையாசிரியர்களின் போக்கிற்கும் புதிய திறனாய்வுப் போக்கிற்கும் இடைப்பட்ட நிலையில் விளங்குகிறது" – இ. மறைமலை

# பண்டிதத் திறனாய்வாளர்கள்



மறைமலையடிகள், மு. வரதராசனார் முதலிய கல்வியாளர்கள் இக்கால இலக்கிய ஆக்கங்களில் ஈடுபட்டபோதும் தங்களின் ஆசிரியத் தொழில் காரணமாகப் பழந்தமிழ் இலக்கியம் பற்றி அதிகம் சிந்தித்தனர். இவர்களை க.நா.சு., கைலாசபதி முதலியோர் "பண்டிதர்கள்" என்றும் இவர்கள் திறனாய்வைப் "பண்டிதத் திறனாய்வு" என்றும் குறிக்கின்றனர்.

"நவீனத் திறனாய்வு முலாம் பூசப்பெற்ற புதிய விருத்தியுரையே" – க. கைலாசபதி.

# இயக்கமாக வளருதல்

**இருவேறு போக்குகள்** – மறைமலையடிகள் எழுத்துக்கள் துணைபோயுள்ளன

சங்க இலக்கியச் சார்பானவர்கள் | கம்பராமாயணச் சார்பானவர்கள்

## பிராமண எதிர்ப்பு இயக்கம்

1. இந்திய விடுதலை இயக்கம் வலுப்பெற்ற போது தமிழ்நாட்டில் பிராமண எதிர்ப்பு இயக்கமும் வலுப்பெற்றது.
2. வீரசைவர்கள், சித்தர்கள், வள்ளலார், சுந்தரம்பிள்ளை முதலியவர்களால் வளர்த்தெடுக்கப்பட்டது பிராமண எதிர்ப்பு இயக்கம்.
3. உச்சகட்ட வடிவமாக 1916இல் நீதிக்கட்சியாக அரசியல் வடிவம் எடுத்தது.

# இயக்கமாக வளருதல்

1. பல்லவர் சோழர் காலத்திலேயே பிராமண எதிர்ப்பு இக்கம் தோன்றிவிட்டது. அன்றிலிருந்தே தென்னிந்திய அரசியல் வரலாறு வேளாளர் – பிராமணர் இடையே ஏற்படும் முரண்பாடாகவும் தேவையாகவும் இயக்கம் கொண்டிருக்கிறது. – ஆய்வாளர் பர்ட்டன் ஸ்டெயின்
2. இந்திய விடுதலை இயக்கத்தில் பார்ப்பன ஆதிக்கத்தை வெறுத்து தியாகராச செட்டியார், டி.எம். நாயர், சி. நடேசன் முதலியார் நீதிக்கட்சியைத்தொடங்கினர்.
3. 1925இல் காங்கிரசு கட்சியிலிருந்து வெளியேறிய தந்தை பெரியாரால் பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் மேலும் வலுவடைந்தது.

# இயக்கமாக வளருதல்

4. ஆங்கிலேயர் ஆட்சியில் கிடைத்த கல்வி, தொழிற்சமூக வளர்ச்சி காரணமாக புதிய படித்த நடுத்தர வகுப்பினர் இவ்வியக்கம் வளர்வதற்கு வாய்ப்பாக அமைந்தனர்.

5. சமூக அமைப்பிலும், அரசியல் வாழ்விலும், கலை, இலக்கியம், கல்வி, சமயம் முதலிய பண்பாட்டுத் துறைகளிலும் பிராமணர்கள் மேம்பட்ட நிலையில் இருந்தனர். சமஸ்கிருதத்துக்கு முதன்மை அளித்தனர்.

6. இன அடிப்படையில் – திராவிட இயக்கம்

7. சமய அடிப்படையில் – சைவசமய எழுச்சிக்கான இயக்கம்

8. மொழி அடிப்படையில் – தனித்தமிழ் இயக்கம்

9. சாதி அடிப்படையில் – தன்மான இயக்கம்

எனப் பன்முகத்தன்மை கொண்டதாக விரிந்து வளர்ந்தது.

# இருவித ஆய்வுப் போக்குகள்

1. சங்க இலக்கியங்களே தூய இலக்கியங்கள் என்றும் இடைக்காலத்தில் எழுந்த கம்பராமாயணம் முதலிய இலக்கியங்கள் சமஸ்கிருத ஆதிக்கத்தின் விளைவு என்றும் கருதப்பட்டன.
2. இராமாயணக்கதை – ஆரியர் – திராவிடர் போராகக் கருதப்பட்டது.
3. இராமன் – ஆரியன், இராவணன் – திராவிடன் – என விளக்கம் பெற்றனர்.
4. இராவணனின் வீழ்ச்சி தமிழர் வீழ்ச்சியாகவும் விளக்கம் பெற்றது.
5. பூரணலிங்கம்பிள்ளை – இராவணப் பெரியார் என்ற நூலை எழுதினார். இந்நூலில் தாடகை – திரவிட மகளாகப் பார்க்கப்பட்டாள். அனுமன் – திராவிட வீரன், வீடணன் – சகோதரத் துரோகி, தமிழர் போர்முறைப்படிதான் இராவணன் சீதையைத் தூக்கினான். சீதையும்கூட திராவிடப் பெண்ணே.

# இருவித ஆய்வுப் போக்குகள்

6. புலவர் குழந்தை – இராவண காவியம்
7. பா. வே. மாணிக்கநாயக்கர் – கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும்
8. சி.என். அண்ணாதுரை – கம்பரசம்
9. செ.சு. சுப்பிரமணிய ஆச்சாரியார் – சிலப்பதிகாரமும் ஆரியக் கற்பனையும்

மறுப்பு நூல்கள்

1. கு. பாலசுந்தர முதலியார் – கம்பரச ஆராய்ச்சி
2. ரா.பி. சேதுப்பிள்ளை – அரக்கர் தமிழரா? - இவர் ஆரியர்களை அரக்கர் என்றும் இராமனைத் திராவிடன் என்றும் கருதினார்.

# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு

அலகு 3

## கல்வியாளர் திறனாய்வு -3

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை
07.10.2020

# இயக்கமாக வளருதல்

4. ஆங்கிலேயர் ஆட்சியில் கிடைத்த கல்வி, தொழிற்சமூக வளர்ச்சி காரணமாக புதிய படித்த நடுத்தர வகுப்பினர் இவ்வியக்கம் வளர்வதற்கு வாய்ப்பாக அமைந்தனர்.

5. சமூக அமைப்பிலும், அரசியல் வாழ்விலும், கலை, இலக்கியம், கல்வி, சமயம் முதலிய பண்பாட்டுத் துறைகளிலும் பிராமணர்கள் மேம்பட்ட நிலையில் இருந்தனர். சமஸ்கிருதத்துக்கு முதன்மை அளித்தனர்.

6. இன அடிப்படையில் – திராவிட இயக்கம்

7. சமய அடிப்படையில் – சைவசமய எழுச்சிக்கான இயக்கம்

8. மொழி அடிப்படையில் – தனித்தமிழ் இயக்கம்

9. சாதி அடிப்படையில் – தன்மான இயக்கம்

எனப் பன்முகத்தன்மை கொண்டதாக விரிந்து வளர்ந்தது.

# இருவித ஆய்வுப் போக்குகள்

1. சங்க இலக்கியங்களே தூய இலக்கியங்கள் என்றும் இடைக்காலத்தில் எழுந்த கம்பராமாயணம் முதலிய இலக்கியங்கள் சமஸ்கிருத ஆதிக்கத்தின் விளைவு என்றும் கருதப்பட்டன.
2. இராமாயணக்கதை – ஆரியர் – திராவிடர் போராகக் கருதப்பட்டது.
3. இராமன் – ஆரியன், இராவணன் – திராவிடன் – என விளக்கம் பெற்றனர்.
4. இராவணனின் வீழ்ச்சி தமிழர் வீழ்ச்சியாகவும் விளக்கம் பெற்றது.
5. பூரணலிங்கம்பிள்ளை – இராவணப் பெரியார் என்ற நூலை எழுதினார். இந்நூலில் தாடகை – திரவிட மகளாகப் பார்க்கப்பட்டாள். அனுமன் – திராவிட வீரன், வீடணன் – சகோதரத் துரோகி, தமிழர் போர்முறைப்படிதான் இராவணன் சீதையைத் தூக்கினான். சீதையும்கூட திராவிடப் பெண்ணே.

# இருவித ஆய்வுப் போக்குகள்

6. புலவர் குழந்தை – இராவண காவியம்
7. பா. வே. மாணிக்கநாயக்கர் – கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும்
8. சி.என். அண்ணாதுரை – கம்பரசம்
9. செ.சு. சுப்பிரமணிய ஆச்சாரியார் – சிலப்பதிகாரமும் ஆரியக் கற்பனையும்

மறுப்பு நூல்கள்

1. கு. பாலசுந்தர முதலியார் – கம்பரச ஆராய்ச்சி
2. ரா.பி. சேதுப்பிள்ளை – அரக்கர் தமிழரா? - இவர் ஆரியர்களை அரக்கர் என்றும் இராமனைத் திராவிடன் என்றும் கருதினார்.

# இருவித ஆய்வுப் போக்குகள்

## ஆய்வுப் போக்கின் வேர்கள்

1. மறைமலையடிகள்
2. டி.கே. சிதம்பரநாத முதலியார்

**மறைமலையடிகள் – தனித்தமிழ் இயக்கம் (1916)**

தமிழ்ப்பற்று, திராவிட இன உணர்வு காரணமாகச் சங்க இலக்கியத்தை உயர்வாகவும் கம்பராமாயணத்தைத் தாழ்வாகவும் மதிப்பிட்டார்.

கம்பன் கவிதையில் இயல்புத்தன்மை இல்லை

சங்கக் கவிதைகள்தான் உண்மையான கவிதைகள்

# இருவித ஆய்வுப் போக்குகள்

டி.கே.சிதம்பரநாத முதலியார்

மறைமலையடிகள் தன் கருத்தை விளக்க எடுத்துக்காட்டும் அதே பாடல்களை எடுத்துக்கொண்டு கம்பராமாயணப் பெருமையை விளக்கினார்.

சங்க இலக்கியங்களில் பாவம் இலை, உணர்ச்சி இல்லை. கம்பராமாயணத்தைத் தள்ளிவிட்டு, சங்க இலக்கியத்தைச் சுவைப்பது ஆட்டிடத்துப் பால்மடி இருக்க, அதை விட்டுவிட்டுக் கழுத்தில் தொங்கும் அதரைச் சுவைத்துக்கொண்டிருப்பதைப் போன்றது – என்று எழுதினார்.

தமிழ்த் திறனாய்வு வரலாற்றி இத்தகைய போக்கு இன்றுவரை தொடர்வதற்கான வேர்கள் இவர்களிடமிருக்கிறது.

# இருவித ஆய்வுப் போக்குகள்

எதிர்நிலை வாசகர்களும் திறனாய்வாளர்களும்

| | | |
|---|---|---|
| சங்க இலக்கியங்கள் | x | கம்பராமாயணம் |
| தேவாரம் | x | நாலாயிரத் திவ்விய பிரபந்தம் |
| பாரதிதாசன் | x | பாரதியார் |
| மு.வ./அகிலன்/செகசிற்பியன் | x | மௌனி/லா.ச.ரா./சுந்தரராமசாமி/பிரமிள் |

தமிழில் தமிழ் மொழியினர் அனைவராலும் சிறந்த எழுத்தாளர் என்று ஏற்றுக்கொள்ளப்படுபவர் ஒருவர்கூடக் கிடையாது… தமிழ் மொழியினருக்குச் சிறந்த எழுத்தாளர் யார் என்று இனங்கண்டுபிடிக்கும் ஆற்றல் கிடையாது; அதாவது உண்மையான விமர்சனப் பார்வை கிடையாது - அசோகமித்திரன்.

# இருவித ஆய்வுப் போக்குகள்

1. கட்சி கட்டிக்கொள்ளும் குழு மனப்பான்மை
2. சிறந்த எழுத்தாளர்களை அடையாளம் காட்ட இயலாமை

இலக்கிய விழிப்புணர்வுத் தரமின்மைக்கு அடிப்படைக் காரணங்கள்.

சரியான விமர்சனம் இல்லாத தனிமனிதனும் சரி, ஒரு சமூகமும் சரி, தானாகவே அழிந்து போவர். தமிழிலக்கியம் காப்பற்றப்பட வேண்டுமென்றால் சரியான திறனாய்வுகள் வளர வேண்டும்; திறனாய்வு இல்லாத இடத்தில், இலக்கியமும் தன் இருப்பை இழந்துவிடுகிறது. இது வரலாறு. – க. பஞ்சாங்கம்

# இருவித ஆய்வுப் போக்குகள்

**செல்வக்கேசவராய முதலியார் வழிவந்தோர்**

சங்க இலக்கியம், கம்பராமாயணம் என்று வேறுபாடு பார்க்காத ஆய்வாளர்கள்

1. ரா.பி. சேதுப்பிள்ளை
2. தெ.பொ.மீ.
3. அ.ச. ஞானசம்பந்தன்
4. எஸ். இராமகிருட்டிணன்
5. சுப்புரெட்டியார் முதலியோர்

**மறைமலையடிகள் வழிவந்தோர்**

தம் காலத்து அரசியல் இயக்கம் அளித்த கருத்துக்களின் தாக்கத்திற்கு ஏற்ப இயங்கியோர்.

1. சோமசுந்தர பாரதியார், 2. முத்துசிவன்

3. மு. வரதராசனார்

4. அ. சிதம்பரநாதன் செட்டியார்

5. சாலை இளந்திரையன்

6. தமிழண்ணல்

7. ம. ரா. போ. குருசாமி 8. ந. சஞ்சீவி

9. வ. சுப. மணிக்கம், 10. சோ.ந. கந்தசாமி

11. க.ப. அறவாணன் முதலியோர்

# இருவித ஆய்வுப் போக்குகள்

தெ.பொ.மீ. வழியினர்

மொழியியல், சமூகவியல் முதலிய மானுட அறிவியல் அடிப்படையில் இலக்கியத்தை விளக்க முயல்பவர்கள்.

மு. வ. வழியினர்

திராவிட இயக்கச் சிந்தனையின் அடிப்படையில் எழுதுபவர்கள்.

க. கைலாசபதி வழியினர்

80களுக்குப் பிறகு கைலாசபதி வழி வருபவர்கள் என்ற மரபும் உருவாகியுள்ளது.

இக்கால இலக்கியத் திறனாய்வாளர்கள்: மா. இராமலிங்கம், தா.வே. வீராச்சாமி, முத்துசண்முகம் பிள்ளை, தண்டபாணி, சு. வெங்கட்ராமன், மோகன், ஆ. செகந்நாதன், சண்முக சுந்தரம், இ. மறைமலை முதலியோர் மேற்கண்ட மூன்று பிரிவுகளுக்குள் அடங்குவர்.

# பற்றி நூல்கள்

1. கல்வி நெறியாளர்கள் நிறைய நூல்களை வெளியிடுகின்றனர்
2. வணிகம், தொழில் சார்ந்த நூல்கள்
3. 80களுக்குப் பிறகு எம்பில், பிஎச்டி பட்டங்களால் குறைந்தது 3 புத்தகங்கள் வந்தால்தான் கல்வியுலகில் மதிப்பு என்ற மாயை உருவானது.
4. க.நா.சு. இவர்களது நூல்களை "பற்றி நூல்கள்" என்று குறிப்பிட்டார்.

க. கைலாசபதி
எல்லாம் ஒரே அச்சில் வார்த்த வார்ப்புகள் – கல்விநெறித் திறனாய்வாளர்களின் நூல்களின்மீது வைத்துள்ள விமர்சனம்.

கல்வியாளர்கள் அல்லாமலும் பலர் பல தளங்களில் இயங்கி வருகின்றனர். அவர்களையும் சேர்த்துக்கொண்டு ஆராய்ந்து மதிப்பிடுதல் அவசியம்.

# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு

அலகு 3

## கல்வியாளர் திறனாய்வு -4

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

12.10.2020

# கல்விநெறியாளர்களும் திறனாய்வாளர்களும்

1. கல்விநெறியாளர்கள் தொழில் அடிப்படையில் மாணவர் நடுவே இயங்குபவர்கள்.
2. திறனாய்வு – ஒழுக்கமுறைத்திறனாய்வாக, விளக்கமுறைத்திறனாய்வாக, பழைய உரைகளின் குணத்தைப் பெற்று விளங்குகின்றன.
3. பாடத்திட்டதிற்கு ஏற்ப இயங்கவேண்டி உள்ளது.
4. வெளியே இருப்பவர்களைப் போல, சுதந்திரமாக எழுதமுடியாத நிலையில், எல்லாக் கட்டுரைகளின் போக்கும் ஒரே தன்மையுடையவைகளாக அமைந்துவிடுகின்றன.

## நான் கற்றவன்; நான் அறிந்தவன் – தன்முனைப்பு

கல்வியாளர்களின் உளவியல் இதுதான்.

1. கற்ற நூல்களில் இருந்து மேற்கோள்களைக் கொட்டி எழுதவர்.
2. தாங்கள் வாழ்ந்து பெற்ற அனுபவங்களைத் திறனாய்வில் காட்டிக்கொள்ள மாட்டார்கள்.
3. பதவி உயர்வு, மாதச் சம்பள வாழ்க்கை, கருத்தரங்கு நடத்தும் வசதி, புத்தகம் வெளியிடவும் விற்கவும் உள்ள எளிய வழிகள் ஆகியன இவர்களைக் கட்டுப்படுத்துகின்றன.
4. பெரும்பாலோர் பிரச்சனைகள் முளைக்க வாய்ப்புள்ள தற்கால இலக்கியங்களைத் தொடுவதில்லை.

## நான் கற்றவன்; நான் அறிந்தவன் – தன்முனைப்பு

5. பழம்பெரும் இலக்கியங்களைப் பற்றிப் பேசவே இன்னம் விரும்புகின்றனர். (அதுவும் உண்மையைப் பேசமாட்டார்கள்.)
6. தற்கால இலக்கியங்களை ஆராய்பவர்கள் பிரச்சனை ஏற்படாமல் எழுதுவதைத் தெரிந்து வைத்துள்ளனர்.
7. பிரபலமான தற்கால எழுத்தாளர்களைக் குறித்து எழுதித் தாமும் பிரபலமடைவதும் வணிகரீதியாக வெற்றி என்ற நோக்கில் இயங்குகின்றனர்.
8. அரசியல் செல்வாக்குள்ள எழுத்தாளர்களைக் குறித்து எழுதி பதவி உயர்வு பெறத் திறனாய்வின் பெயரைப் பயன்படுத்துகின்றனர்.

## அனுபவத் தரித்திரம் மிக்கவை – சுந்தரராமசாமி

1. இலக்கியத் திறனாய்வை இரத்தமும் சதையோடும் கூடிய மதிப்பீடுகளிலிருந்து தங்களின் நடுத்தர வர்க்கக் குணத்தால் அறுத்துவிடுகின்றனர்.
2. இலக்கியத்தில் என்னென்ன? என்று எண்ணத் தெரிகிற அளவிற்கு எதற்காக என்ற வினாவை எழுப்பப் பயந்து, அந்த வினாவையே கல்வி நிலையங்கள் கொன்றுவிடுகின்றன – சுந்தரராமசாமி
3. கல்வியாளர்கள் எழுத்தில் மிஞ்சுவது வெறும் விவரங்களே!
4. கல்வியாளர்களின் எழுத்துக்கள் அனுபவத் தரித்திரம் மிக்கவை, விமர்சன மொண்ணைத்தனமும் ஆங்கில மோகமும் மலட்டுத்தனமும் நிறைந்தவை - சுந்தரராமசாமி

## கோட்பாட்டு நூல்களை உருவாக்குவது

1. இலக்கியத் திறனாய்வு ஒரு பாடமாக பட்டப்படிப்பில் (பி.ஓ.எல். ஆனர்சு) 1941இல் கொண்டுவரப்பட்டது. சென்னை பச்சையப்பன் கல்லூரியில் மட்டும் இப்பாடம் நடத்தப்பட்டது.
2. பாடத்திட்டத்திற்கு ஏற்பத் தாங்கள் தயாரித்த குறிப்புகளைப் பத்தகமாகக் கல்வியாளர்கள் வெளியிட்டனர்.
3. மு. வரதராசன் – இலக்கியத்திறன், இலக்கிய மரபு
4. அ.ச. ஞானசம்பந்தம் – இக்கியக் கலை
5. இலக்கியத்தில் உணர்ச்சி, வடிவம், கற்பனை, உணர்த்துதல் ஆகிய கூறுபாடுகளையும் காவியம், நாடகம், புதினம், சிறுகதை முதலிய இலக்கிய வகைமைகளையும் ஆங்கில நூலாசிரியர்களின் மேற்கோள்களுடன் விளக்கினர்.

# கல்விநெறியாளர்களும் திறனாய்வாளர்களும்

## கோட்பாட்டு நூல்களை உருவாக்குவது

ரா.ஸ்ரீ. தேசிகன் – கவிதைக்கலை
ந. சஞ்சீவி – இலக்கிய இயல் அ.ஆ.
தா. ஏ. ஞானமூர்த்தி – இலக்கியத் திறனாய்வியல்
ந. சுப்புரெட்டியார் – கவிதை அனுபவம்
மா. இராமலிங்கம் – நாவல் இலக்கியம்
வை. சச்சிதானந்தன் – ஒப்பிலக்கியம் ஓர் அறிமுகம்
க.ப. அறவாணன் – கவிதையின் உடல், உயிர், உள்ளம்
தமிழண்ணல் – ஒப்பிலக்கிய அறிமுகம்
திருமதி முருகு ரத்தினம் – மேலை இலக்கியத் திறனாய்வு
ஜே. நீதிவாணன் - நடையியல்

நாட்டுப்புறவியல் பற்றி,
தே. லூர்து – நாட்டார் வழக்காற்றியல் அடிப்படைகள்
சு. சக்திவேல் - நாட்டுப்புறவியல்

# கல்விநெறியாளர்களும் திறனாய்வாளர்களும்

1. தங்களுக்கென ஒரு கண்ணோட்டமின்றி, ஆங்கில மேற்கோள்களை ஒரு கலவையாகப் பயன்படுத்தியுள்ளனர்.
2. அ.ச. ஞானசம்பந்தம் – இலக்கியக் கலை நூலை எரித்துவிடலாம் என்று கூறுமளவுக்குப் பல குற்றங்களுடன் வெளிவந்துள்ளன.
3. திறனாய்வுக்கான கலைச்சொல்லாக்கத்தில் மு.வ. உட்படப் பலரும் புரிந்துள்ள தவறுகளைக் க. சிவத்தம்பி சுட்டிக்காட்டியுள்ளார்.
4. இந்திய நாட்டு ஆய்வாளர்களிடம் கோட்பாடுகளைப் பற்றிய புரிதல் குறைபாடு உடையதே – மருதநாயகம்
5. கோட்பாட்டு வறுமை நிலவுவதால் கல்வியாளர்கள் கட்டுரைகள் எல்லாமே ஒன்றுபோலத் தோற்றம் அளிக்கின்றன.
6. புதிய இலக்கியம் (சிறுகதை, புதினம் முதலியன) வளர்ச்சி பெற்ற அளவிற்கு, அது தொடர்பான கோட்பாடுகள் தமிழ்ச்சூழலில் பரிச்சயமாக்கப்படவில்லை.

# கல்விநெறியாளர்களும் திறனாய்வாளர்களும்

## குறைபாடுகளைக் கடந்த திறனாய்வுப் பணி

1. இவ்வளவு குறைபாடுகள் இருந்தாலும் இத்தகைய நூல்கள்தான் தமிழில் திறனாய்வுத் துறை ஒரு தனித்துறையாக விளங்குவதற்குத் துணைபுரிந்தன.
2. இலக்கணக் குறிப்பிலும் சிலேடை நயத்திலும் இலக்கியச் சுவை கண்டுகொண்டிருந்த தமிழ்ச்சூழலை இக்கோட்பாட்டு நூல்களே மாற்றியமைத்தன. – முத்துசண்முகம்

## ஆங்கில இலக்கியம் கற்றுத் தமிழில் எழுதியுள்ள கல்வியாளர்கள்

1. திறனாய்வு வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்துள்ளனர்
2. குளோரியா சுந்தரமதி – இலக்கியக் கொள்கைகள் ( மொழிபெயர்ப்பு)
3. அ. அ. மணவாளன் – கவிதையியல் (மொழிபெயர்ப்பு)
4. ஜி. ஜான் சாமுவேல் – கவிதைக்கலை (மொழிபெயர்ப்பு)
5. தி.சு. நடராசன் – எழுதும் கலை (மொழிபெயர்ப்பு)

# கல்விநெறியாளர்களும் திறனாய்வாளர்களும்

சிறுபத்திரிகைச் சூழலில் இயங்குபவர்கள்

ஆழமான திறனாய்வுத் தளத்தில் இயங்கும் சிறுபத்திரிகைச் சூழலிலும் கல்வியாளர்கள் பலர் இயங்கிவந்துள்ளனர்.

க. கைலாசபதி, சி. கனகசபாபதி, க. சிவத்தம்பி, எம்.ஏ. நுஃமான், தமிழவன், ஞானி, அ. மார்க்ஸ், கோ. கேசவன், ராஜ்கௌதமன், நா. சிவசுப்பிரமணியன், தே. லூர்து, எம்.டி. முத்துக்குமாரசாமி

கல்வியாளர்களைத் தீண்டத்தகாதவர்களாகப் பார்க்கின்ற பார்வை இனியும் தொடரத் தேவையில்லை. கல்வியாளர்கள், கல்வியாளர் அல்லாதார் என்ற பிரிவினை திறனாய்வு வளர்சியைத் தடுக்கும். – க. பஞ்சாங்கம்

# கல்விநெறியாளர்களும் பத்திரிகையாளர்களும்

## கல்வித்துறை இதழ்கள்

சென்னைப் பல்கலைக்கழகம் – தமிழாய்வு

மதுரைப் பல்கலைக்கழகம் – வையை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் – மொழியியல், நாட்டுப்புறவியல்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் – தமிழியல்

தமிழ்ப்பல்கலைக்கழகம் – தமிழ்க் கலை

ஞானபோதினி, தமிழபிமானி, செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ், தென்மொழி

## இலக்கிய இதழ்கள்

எழுத்து, தாமரை, படிகள், இலக்கிய வெளிவட்டம், ஆராய்ச்சி, பரிமாணம், நிகழ், இனி, காலச்சுவடு, மன ஓசை.